## யாழ். தபாலகத்தில் உறங்கும் வெளிநாட்டுக் கடிதங்கள்

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் பிரதமதபாலகத்தில் பொதுமக்களுக்கு விநியோகிக்கப்பட வேண்டிய வெளிநாட்டுத் தபால்கள் தேங்கிக் கிடக்கின்றன.

இது தொடர்பாக எமது நிருபர் வினவியபோது, யாழ்ப்பாணத்திலிருந்து பலர் இடம்பெயர்ந்துள்ளதால் அவர்கள் திரும்பி வரும்வரை விநியோகிக்க முடியாது என உயர் அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

யாழ். மாவட்டத்தில் உள்ள (4 ஆம் பக்கம் பார்க்க)

## மாந்தையை சிறிலங்கா இராணுவம் சூறையாடியது

(மன்னார்)

தள்ளாடி இராணுவமுகாமில் இருந்து பதின்னான்கு வாகனங்களில் வெளிவந்த இராணுவத்தினர் மாந்தைப் பகுதியில் பெரும் அட்டகாசம் புரிந்தனர். இதற்கு விமானப்படையின் ஹெலிகப்டர்கள் பாதுகாப்பு வழங்கின.

திருக்கேதீஸ்வரம் கோயிலுக்குச் சொந்தமான மடம் உடைக்கப்பட்டதோடு அங்கிருந்த ஜெனரேட்டர்களையும் இராணுவத்தினர் எடுத்துச் சென்றனர்.

மேலும் மாந்தைச்சந்தியில் இருந்த பதினொரு (4 ஆம் பக்கம் பார்க்க)

Registered as a News Paper in Sri Lanka பக்கங்கள் 04 விலை: ரூபா: 3-00

# ஈழநாதம்

THE EELANAATHAM *Peoples Daily* மக்கள் தினசரி

நாதம் 01 பிரமோதூத ஹு ஆடி மீ 26 ஆம் உ சனிக்கிழமை (11 - 08 - 1990) ஹிஜ்ரி 1410 முஹறம் 19 ஓசை 174

## இரண்டுமாத முடிவிலும் வான் படை ஓயவில்லை

(யாழ்ப்பாணம்)

போர் தொடங்கி இரண்டு மாதம் பூர்த்தியாவதையொட்டி விமானத்தாக்குதலுக்கு சிறிலங்கா அரசு ஓய்வு கொடுத்துவிட்டதோ என யாழ். குடாநாட்டு மக்கள் எண்ணுமளவுக்கு நேற்று முன்தினம் இரவிலிருந்து நேற்று மாலை வரை விமானத்தாக்குதல்கள் நிறுத்தப்பட்டிருந்தன. நேற்று மாலை (4ஆம் பக்கம் பார்க்க)

# 50 நாள் போரில் 1500 படை பலி!

# 217 புலிகள் வீரமரணம்!

## மூவாயிரம் மக்கள் மரணம், 8 லட்சம் அகதிகள்

(யாழ்ப்பாணம்)

தமிழீழத்தில் கடந்த 50 நாட்களாக ஸ்ரீலங்காவின் முப்படையினருக்கும் தமிழீழ விடுதலைப் புலிகளுக்குமிடையே நடைபெற்றுவரும் யுத்தத்தில் ஸ்ரீலங்காப் படையைச் சேர்ந்த (காவல் துறையினர் உட்பட) 1500க்கு மேற்பட்டோர் கொல்லப்பட்டனர். 2000க்கு மேற்பட்டோர் படுகாயமடைந்தனர்.

விடுதலைப் புலிகள் தரப்பில் 217 போராளிகள் வீரமரணமடைந்துள்ளனர். ஸ்ரீலங்காவின் முப்படையினரின் திட்டமிட்ட தாக்குதலால் 3 000க்கு மேற்பட்ட அப்பாவிப் பொதுமக்கள் பலியானார்கள்; 8லட்சத்திற்கும் மேற்பட்ட மக்கள் அகதிகளாக இடம் பெயர்ந்துள்ளனர்,

தமிழீழ விடுதலைப் புலிகளின் அதிகாரபூர்வ ஏடான 'விடுதலைப் புலிகள்' இத்தகவலை வெளியிட்டுள்ளது.

கடந்த ஆனி மாதம் 11ஆம் திகதி சிங்களப் படைகளுடன் தொடங்கிய போரானது தமிழீழ விடுதலைப் போராட்டத்தில் ஒரு புதிய பரிணாமத்தை ஏற்படுத்தியுள்ளது என்றும் கேந்திர முக்கியத்துவம் வாய்ந்த பல சிங்கள இராணுவ முகாம்களும் காவல்துறை நிலையங்களும் (4 ஆம் பக்கம் பார்க்க)

### ஹெலி தாக்குதல்

#### அராலித்துறையில் ஒருவர் மரணம்

(வேலணை)

நேற்று முன்தினம் மாலை அராலித்துறைப் பகுதியில் இடம்பெற்ற ஹெலிகொப்ரர் தாக்குதலின்போது சரவணையைச் சேர்ந்த ஒருவர் மரணமானார். திடீரென மேற்கொண்ட ஹெலித் தாக்குதலினால் அராலித் துறையில் நின்ற பல பொதுமக்கள் காயத்திற்குள்ளானார்கள்.

#### புங்குடுதீவில் ஒருவர் காயம்

நேற்று புங்குடுதீவு நுழைவாயில் பிள்ளையார் கோவிலிலும் தாக்குதல்கள் மேற்கொள்ளப்பட்டன. கோயில் சேதமடைந்துள்ளது. ஒருவர் காயமடைந்துள்ளார். மேலும் வேலணையில் பொதுமக்களுக்கு குடிநீர் வழங்கும் பவுசர் வாகனமும் ஹெலி தாக்குதல்களினால் சேதமடைந்தது. (15)

#### வேலணையில் ஒருவர் பலி

நேற்றுமுன்தினம்காலைதீவுப் பகுதியில்இடம்பெற்ற ஹெலி தாக்குதலின்போது வேலணை சாட்டி. என்ற இடத்தில் குடி (4 ஆம் பக்கம் பார்க்க))

#### மட்டக்களப்பில் சிங்களப்பொலிஸ் அதிகாரிகள்

(கொழும்பு)

மட்டக்களப்பில் தமிழ் பொலிஸ் அதிகாரிகளுக்கு பதிலாக இரு சிங்கள அதிகாரிகள் நியமிக்கப்பட்டுள்ளனர் என அகில இந்திய வானொலி அறிவித்தது.

## பத்து தமிழர் சுட்டுக்கொலை

(மட்டக்களப்பு)

மண்டூர் என்னும் இடத்திலிருந்து அண்றாட தேவைப் பொருட்களை வாங்குவதற்காக சவளக்கடைக்கு சென்ற பத்து தமிழ் மக்கள் மீது ஸ்ரீலங்கா இராணுவத்தினர் கடந்த ஏழாம் திகதி துப்பாக்கிப் பிரையோகம் செய்து அவர்களை கொன்றனர்.

சவளக்கடைப் பகுதியில் வைத்து நடந்த இச்சம்பவத்தில் மேலும் எத்தனை பேர் காயமடைந்தனர் என்ற விபரம் தெரியவரவில்லை. (லோ)

## அகதிகள் அதிகரிப்பால் இந்தியா கவலை

(சென்னை)

இலங்கையில் இருந்து தமிழ் அகதிகள் இந்தியாவுக்கு வருவதுபடிப்படியாக அதிகரிப்பது குறித்து இந்தியா கவலை கொண்டுள்ளது என்று கொழும்பில் உள்ள இந்தியத்தூதுவர் எம். எல். யா இங்குசெய்தியாளரிடம் கூறினார்.

இந்த அகதிகள் அதிகரிப்பை தடுக்க இந்திய அரசு முன்னுரிமை அளித்துள்ளது என்றும் அதற்கு இலங்கை அரசு ஒத்துழைப்புத்தர தயாராக இருப்பதாகவும் அவர் சொன்னார்.

அகதிகள் வந்து கொண்டிரு (4 ஆம் பக்கம் பார்க்க)

### வீர வணக்கங்கள்

(யாழ்ப்பாணம்)

அச்சுவேலியில் நேற்றுஇடம் பெற்ற எதிர்பாராத சம்பவத்தால் மேஜர் ஜேம்ஸ் (உருத்திராதிபதி சிறிதரன் வல்வெட் (4-ஆம் பக்கம் பார்க்க)

### 3 தமிழர் கொலை

(வவுனியா)

வவுனியாவில் சவளக்கடை என்ற இடத்தில் மூன்று தமிழர்கள் முஸ்லிம்களால் கொல்லப்பட்டனர். அவர்களின் வீடுகளும் தீக்கிரையாக்கப்பட்டன.

## கொழும்பு வர்த்தகர்களுக்கு அச்சுறுத்தல் நடவடிக்கை

(கொழும்பு)

அக்டோபர் இருபதாம் திகதிக்கு முன்பதாக தமது கடைகளையும், வர்த்தக நிலையங்களையும் மூடிவிட்டு வெளியேறுமாறு கொழும்பிலுள்ள தமிழர்களுக்கு அச்சுறுத்தல் செய்யப்பட்டுள்ளது.

முஸ்லீம் தீவிரவாதிகள் என்றப் பெயரிலேயே துண்டுப் பிரசுரங்கள் மூலம் இந்த அச்சுறுத்தல் விடுக்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டது.

## கடத்தப்பட்ட பிக்கு சடலமாக மீட்கப்பட்டார்

(அனுராதபுரம்)

அனுராதபுரம் மாவட்டத்தைச் சேர்ந்த தமண என்ற இடத்தில் உள்ள புத்த விகாரையின் பிக்கு ஒருவர் இனம் தெரியாதோரால் கடத்திச் செல்லப்பட்டார். அவரது சடலம் பரஹகெல வாவியில் கண்டெடுக்கப்பட்டது.

இங்குள்ள பணஹ என்ற இடத்தில் கடையொன்றின் (4 ஆம் பக்கம் பார்க்க)

## மட்டக்களப்பு ராணுவ கட்டுப்பாட்டில் என்பது அப்பட்டமான பொய் -கரிகாலன்

(மட்டக்களப்பு)

கிழக்கு மாகாணம் இராணுவத்தினரின் கட்டுப் பாட்டுக்குள் இருப்பதாக சிறிலங்கா அரசு கூறுவது அப்பட்டமான பொய் என்று விடுதலைப் புலிகள் மக்கள் முன்னணிப் பொறுப்பாளர் கரிகாலன் தெரிவித்துள்ளார்.

கொழும்பிலுள்ள யு.என்.ஐ செய்தி நிறுவனத்துக்கு மட்டக்களப்பிலிருந்து டெலிபோன் மூலம் பேட்டியொன்று அளிக்கும் பொழுதே திரு. கரிகாலன் இவ்வாறு கூறியுள்ளார்.

அப்பொழுது திரு. கரிகாலன் மட்டக்களப்பிலிருந்து கொழும்புக்கு தான் டெலிபோன் மூலம் பேசும் இந்த நிலைமைக் கூடாகவே சிறிலங்கா அரசு உண்மையை ஒப்புக் கொள்ள வேண்டுமென்று யு. என். ஐ செய்தி ஸ்தாபனத்துக்கு தெரிவித்துள்ளதாக இந்திய வானொலி அறிவித்தது.

## புலிகளை இராணுவத்தால் அழிக்கமுடியாது -அஷ்ரப்

(கொழும்பு)

விடுதலைப் புலிகளை இராணுவத்தால் அழிக்க முடியாது. அவர்கள் பலம் வாய்ந்த ஒரு இயக்கம் என்று பாராளுமன்றத்தில் நேற்று முஸ்லிம் காங்கிரஸ் தலைவர் அஷ்ரப் கூறினார்

வடபகுதியில் அகதிகள் அதிகரித்துள்ளனர். உணவு, மருந்து இன்றிக் கஸ்டப்படுகின்றனர். வட பகுதி நிலை (4 ஆம் பக்கம் பார்க்க)

### இன்று பயணம்

இலங்கைப் பாராளுமன்றக் குழு இன்று மாலைதீவுக்கு விஜயம் செய்யவுள்ளது. சபாநாயகர்தலைமையில்செல்லும் (4-ஆம் பக்கம் பார்க்க)

## விமானத்தாக்குதலால் கல்லூரி சேதம்

(ஊர்காவற்றுறை)

ஊர்காவற்றுறை காரை நகர்ப்பகுதியில் கடந்த செவ்வாய்க்கிழமை நடைபெற்ற விமானத்தாக்குதலில் ஊர்காவற்றுறை சென். அன்ரனீஸ் கல்லூரியின் ஒருபகுதி முற்றாக சேதமடைந்துள்ளது.

இத்தாக்குதலில் ஐந்துபேர் காயமடைந்துள்ளனர். டொமினிக் ஜெயா (ஊர்காவற்றுறை) ஜே. கஸ்ரின் கமிலன் (ஊர்காவற்றுறை) ச. லூர்தம்மா(ஊர்காவற்றுறை) ஆகியோரும் மெலிஞ்சி முனையைச் சேர்ந்த ஒருவரும் காயமடைந்துள்ளனர்.

மேலும் சூசையப்பர் கோயிலும் தாக்கப்பட்டது. கல்லறைக் கூடு உட்பட பல கட்டிடங்கள் சேதத்திற்குள்ளாயின.

காரைநகரில் சீநோர் பகுதி இத்தாக்குதலினால் சேதமடைந்தது. ஒரு பகுதி கட்டிடம் முற்றாக உடைந்து காணப்படுகின்றது.

## கொண்டாட்டம் இல்லை

(கொழும்புத்துறை)

வடக்குக் கிழக்கு மாகாணங்களில் நிகழும் சிறிலங்கா அரசின் தாக்குதல்கள் காரணமாக இலங்கை திறந்த பல்கலைக்கழகத்தின் பததாவது ஆண்டு நிறைவு விழா வடக்கு கிழக்குப் பகுதிகளில் கொண்டாடப்படமாட்டாது என்று அறிவிக்கப்பட்டுள்ளது. (24)

## வடக்கு - கிழக்கில் இராணுவ நடவடிக்கை தொடரும்

- ரஞ்சன்

(கொழும்பு)

வடக்கு, கிழக்கில் மேற்கொள்ளப்பட்டுள்ள இராணுவ நடவடிக்கைகள் தொடர்ந்து இடம்பெறும் என்று பாதுகாப்புஇராஜாங்கஅமைச்சர் திரு. ரஞ்சன்விஜேரத்தினா நிருபர்கள் மத்தியில் தெரிவித்துள்ளார்.

தமிழீழ விடுதலைப் புலிகள் முற்றாக அழிக்கப்படும்வரை இந்த இராணுவ நடவடிக்கை தொடருமென்று திரு. ரஞ்சன் அங்கு தெரிவித்துள்ளார்.

## ஒவ்வொரு பிரஜையும் மக்கள் முன்னணி உறுப்பினராக வேண்டும்

- மூர்த்தி

(யாழ்ப்பாணம்)

'சிற்றூர் அவை, வட்ட அவை முழுமையாக இயங்கத் தொடங்கியதும் அவ்வப்பகுதிகளிலுள்ள சகல பொறுப்புகளும் அவைகளிடம் ஒப்படைக்கப்படும். சிற்றூர்அவை அரசியல் வேலைகளை மட்டும் கவனிக்கும்; இணக்க சபை கிராமங்களில் ஏற்படும் பிணக்குகளைத் தீர்த்து வைக்கும்''

சண்டிலிப்பாய் உதவி அரசாங்க அதிபர் பிரிவிலுள்ள விடுதலைப் புலிகள் மக்கள் முன்னணி பதினொரு சிற்றூர் - வட்ட அவைகளின் உறுப்பினர்கள், தலைவர்கள் கூட்டம் நடைபெற்ற போது விடுதலைப் புலிகள் மக்கள் முன்னணி அமைப்பாளர் திரு. மூர்த்தி மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் பேசுகையில் குறிப்பிட்டதாவது:

'இரு கிராம சேவையாளர் பிரிவுக்கிருந்த ஒரு சிற்றூர் அவை, ஒரு கிராம சேவையாளர் பிரிவாக இயங்கும்'

'விடுதலைப் புலிகளின் பிரதேசப் பொறுப்பாளர்களுக்கு சிற்றூர், வட்ட அவைகளின் தலைவர்கள் ஆலோசகர்களாக இருக்கவேண்டும் என்றும் தமிழீழத்திலுள்ள ஒவ்வொரு பிரஜையும் விடுதலைப் புலிகள் மக்கள் முன்னணியில் உறுப்பினராதல் வேண்டும் என்றும் சொன்னார்.

விடுதலைப் புலிகள் மானிப்பாய் பிரதேசப் பொறுப்பாளர் திரு. இ. சங்கரும் இக்கூட்டத்தில் கலந்துகொண்டார்.

## வெற்றி வேண்டி விசேட பூஜை

(கொழும்புத்துறை)

தமிழீழ விடுதலைப் புலிகளின் மண்மீட்புப் போராட்டம் வெற்றிபெற வேண்டுமென்றும், தமிழ் மக்களின் சுபீட்சத்திற்கும், நாட்டில் அமைதி, சமாதானம் நிலவ வேண்டி தெய்வ ஆசிகோரியும் ஆவரங்கால் அருள்மிகு சிவன் கோவிலில் கடந்த வெள்ளிக்கிழமை 1008 சங்காபிஷேகமும் பஞ்சமுக அர்ச்சனையும் நடைபெற்றது.

இவ்வைபவத்தை முன்னிட்டு காலையிலிருந்து மாலை வரை பஜனை, கூட்டுப்பிரார்த்தனை ஆகியனவும் இடம்பெற்றது. (24)

## முதலுதவிப் பயிற்சி

கோப்பாய்)

கோப்பாய் பிரிவு சென். ஜோன்ஸ் அம்புலன்ஸ் அத்தியட்சகர் சத்தியேஸ்வரனால் கோப்பாய் வடக்கில் சுமார் 40க்கு மேற்பட்ட மாணவிகளுக்கு முதலுதவிப் பயிற்சி வழங்கப்பட்டது.

மக்களின் நன்மை கருதி கோப்பாய் வடக்கு பூதர் மடத்தில் முதலுதவி நிலையம் அமைப்பதாகவும் மாணவிகளால் தீர்மானிக்கப்பட்டது.

## சந்தை இயங்கவில்லை

(ஈச்சமோட்டை)

கடந்த ஒருவார காலமாக மிக மோசமாக நடைபெற்று வரும் விமானத்தாக்குதலினால் பாஷையூர் மீன்சந்தையும் மரக்கறிச்சந்தையும் வெறிச்சோடிக் காணப்படுகிறது.

மக்களின் பாதுகாப்புக் கருதி சந்தை தற்காலிகமாக வீதி ஒரங்களில் நடைபெறுவதைக் காணமுடிகின்றது.

## மீனுக்கு தட்டுப்பாடு

(ஈச்சமோட்டை)

யாழ்ப்பாணத்தில் கடந்த ஒரு வாரமாகதொடர்ச்சியாக இடம் பெற்று வரும் ஹெலி, பொம்மர் தாக்குதலினால் மீனவர்கள் மீன் பிடிக்க கடலுக்குச் செல்லவில்லை.

இதன் காரணமாக மீனுக்கு தட்டுப்பாடு ஏற்படும் அதே வேளை மீனின் விலையும் அதிகரித்துள்ளது. (43)

## மாயமாய் மறைந்த சைக்கிள்

(ஈச்சமோட்டை)

விமானக்குண்டு வீச்சுக்குப் பயந்து ஒதுங்கியவரின் சைக்கிள் மாயமாய் மறைந்தது.

இச்சம்பவம் பாஷையூர் பகுதியில் சில தினங்களுக்கு முன்பு இடம்பெற்றது.

வீதியில் வந்த நபரொருவர் பாஷையூர் அகதிமுகாம் தாக்கப்பட்டதைத் தொடர்ந்து பயந்த நிலையில் தான் வந்த சைக்கிளை வீதியிலேயே போட்டுவிட்டு அருகிலுள்ள வீடொன்றுக்குள் தஞ்சமடைந்துள்ளார். பின்பு அவர் திரும்பி வந்து பார்த்த பொழுதே சைக்கிள் காணாமல் போனதை அறியமுடிந்தது.

## இராணுவம் பலி

(மட்டக்களப்பு)

மட்டக்களப்பு சுங்காங்கேணி ராணுவ முகாமில் இருந்து கடந்த 7-ம் திகதி வெளியேறிய ராணுவத்தினர் மீது விடுதலைப் புலிகள் தாக்குதல் மேற்கொண்டதில் ஒரு ராணுவத்தினர் கொல்லப்பட்டார். இதன் பின்னர் ராணுவத்தினருக்கு மூன்று கண்ணி வெடிகள் வைக்கப்பட்டது இதனால் ஏற்பட்ட சேதவிபரம் தெரியவில்லை. (ம)

## சம்பளம் ழங்கப்படவில்லை

(யாழ்ப்பாணம்)

யாழ்நகர் தெற்கு கொத்தணி பாடசாலை ஒன்றில் ஆனிமாதச் சம்பளம் ஏற்கனவே மிகத் தாமதமாக கொடுக்கப்பட்டது. இத்துடன் நேற்றுவரை ஆடி மாத சம்பளமும் வழங்கப்படவில்லை.

இதற்கான முக்கிய காரணம் காசோலை எழுதுவதற்குரிய காசோலைப் புத்தகம் பாடசாலை அதிபரினால் வங்கியில் இருந்து எடுக்கப்படவில்லை என்பதாம்.

## யாழ். பிரதம தபாலகம் தற்காலிகமாக செயற்படாது

(கொழும்புத்துறை)

யாழ் பிரதம தபாலகம் நாட்டின்தற்போதையசீரற்ற நிலை காரணமாக தற்காலிகமாசச் செல்படமுடியாத நிலை ஏற்பட்டுள்ளது

மறு அறிவித்தல் வரை இத்தபாலகம் செயற்படமுடியாத நிலையில் உள்ளதாசப் பிரதம தபால் அதிபர் தெரிவித்துள்ளார்.

வெளிநாட்டுத் தபால்கள், அரச திணைக்களங்களின் சம்பளப்பட்டியல் அடங்கிய கடிதங்கள் இன்றுவரை விநியோகம் செய்யப்படாது உள்ளதை இட்டு பல திணைக்கள ஊழியர்களும், பொதுமக்களும் கவலை தெரிவித்துள்ளனர்.

## ஈழப் போராட்டம் வெற்றிபெற ஆராதனை

(கொழும்புத்துறை)

தமிழீழ விடுதலைப் புலிகளின் போராட்டம் வெற்றி பெற வேண்டுமென்றும், நாட்டில் அமைதி, சுபீட்சம், சமாதானம் நிலவ வேண்டியும் தொல்புரம் மந்தி கொட்டடிப்பதி ஆதிமுத்துமாரி அம்பாள் ஆலய ஆடிப்பூர உற்சவதினத்தன்று விஷேட அபிஷேகம் பூசை ஆராதனைகளும், கூட்டுப்பிரார்த்தனைகளும் நடைபெற்றன. (24)

## இரண்டாம் கட்ட ஜனசக்தி

(ஈச்சமோட்டை)

யாழ்ப்பாணத்தில் உள்ள சில பல. நோ. கூ. சங்க கிளைகளில் 2 ஆம் கட்ட ஜனசக்தி உணவுப் பொருட்கள் விநியோகிக்கப்பட்டு வருகிறது.

1000 ரூபாவுக்கு வழங்கப்படும் பொருட்களில் முதற் கட்டமாக 100 ரூபாவுக்கு வழங்கப்பட்டது. தற்பொழுது இரண்டாம் கட்டமாக 200 ரூபா பெறுமதியான மா, சீனி தவிர்ந்த ஏனைய உணவுப் பொருட்கள் வழங்கப்பட்டு வருவது குறிப்பிடத்தக்கது.

## மீட்பு நிதி சேகரிப்பு

(கொழும்புத்துறை)

தமிழீழ மீட்பு நிதிக்கான இரண்டு தங்கப்பவுண் சேகரிப்பு வைபவம் கடந்த புதன் கிழமை காலை நல்லூர் மங்கையர்க்கரசி வித்தியாசாலையிலும், பிற்பகல் யாழ். இந்து மகளிர் கல்லூரியிலும் நடைபெற்றது.

நல்லூர் வடக்குப் பிரதேச மக்களிடமிருந்தும், கந்தர் மடப்பிரதேச மக்களிடமிருந்தும் தமிழீழ விடுதலைப் புலிகளால் பெறப்பட்டது. (24)

## நிர்வாகக்குழு தெரிவு

(அச்சுவேலி)

அச்சுவேலி உலவிக்குளம் பிள்ளையார் கோயில் பரிபாலனத்திற்கு புதிய நிர்வாகக்குழு தெரிவு செய்யப் பட்டுள்ளது.

ஆலயத்தின் நிர்வாகம் தொடர்பாக ஏற்பட்டு வந்த இழுபறியை அடுத்து தமிழ் ஈழ விடுதலைப் புலிகள் மக்கள் முன்னணி வலிகாமம் பொறுப்பாளர் திரு. இ. ஆஞ்சநேயர் கூட்டிய பொது மக்கள் கூட்டத்தில் புதிய நிர்வாகக் குழு தெரிவு செய்யப்பட்டது.

அச்சுவேலி சரஸ்வதி வித்தியாசாலையில் அச்சுவேலி தெற்கு சிற்றூரவைத் தலைவர் திரு. சி சிவம் தலைமையில் நடைபெற்ற பொது மக்கள் கூட்டத்தில் பதினொரு பேர் (11) கொண்ட நிர்வாகக்குழு தெரிவுசெய்யப்பட்டது. (16)

## தட்டுப்பாடு

(கொழும்புத்துறை)

பனை அபிவிருத்திச் சபையின் தயாரிப்புக்களான பாம்போஷா, புழுக்கொடியல்மா, ஒடியல்மா, பனாட்டு போன்றவற்றுக்கு அதிக கிராக்கி ஏற்பட்டுள்ளது.

வடபகுதியில் இம்முறை காலப்போக்கில் மரவள்ளி குரக்கன் உற்பத்திகளை அதிகரிக்க கிராம மட்டத்திலுள்ள சகல விவசாயிகளும் முயற்சி எடுத்து வருவதை காணக்கூடியதாக உள்ளது. (24)


## இடமாற்றம்

# ஸ்ரீகாந்த் - மக்மிலன்

எமது அன்புக்கினிய தமிழீழ மக்களே!

வாடிக்கையாளர்களினதும், சைவ அடியார்களினதும் நன்மையை கருத்தில் கொண்டு எமது புத்தகசாலைகளை நல்லூர் கோபுரவாசலுக்கு முன்புறமுள்ள கற்பகம் நிலையத்திற்கு அருகாமையில் ஆரம்பித்துள்ளோம் என்பதை அறியத் தருகின்றோம்.

கிளை ஸ்தாபனம்:

## மக்மிலன் புத்தகசாலை - ஸ்ரீகாந்த் புத்தகசாலை

ஒட்டுமடம், யாழ்ப்பாணம்.

(B/1305)


## பிரதேச உள்ளூராட்சி உதவி ஆணையாளர் அலுவலகம் யாழ்ப்பாணம்

(1) மாநகர சபை; நகர சபைகள்;
பிரதேச சபைகள் அனைத்திற்கும்:

உங்கள் காரியாலயங்களில் பிற மாவட்டங்களிலிருந்து இடப்பெயர்ந்து வந்த உள்ளூராட்சி மன்ற ஊழியர்கள் தற்போது கையொப்பமிட்டு வருகின்றனர். இவ்வூழியர்களுக்கு மாதாந்தம் ரூ. 1000/- ஐச் சம்பள முற்பணமாக வழங்கத் தீர்மானிக்கப்பட்டுள்ளதால் உங்கள் காரியாலயத்தில் கையொப்பமிடும் இந்த ஊழியர்களது சம்பள முற்பணத்தினை வழங்கி அத்தொகையினை எனது காரியாலயத்திலிருந்து மீளப் பெற்றுக்கொள்ளவும். மேலதிக விபரங்களுக்கு என்னுடன் நேரடியாகத் தொடர்பு கொள்ளவும்.

(2) யாழ். பிரதேச உள்ளூராட்சி
உதவி ஆணையாளர் அலுவலக
ஊழியர்கள் அனனவருக்கும்

எனது காரியாலய ஊழியர்கள் அனைவரும் 90. 08 13 காலை 9. 30 மணிக்கு என்னை எனது காரியாலயத்தில் தவறாது சந்திக்கவும்.

சு. டிவகலாலா
பிரதேச உள்ளூராட்சி உதவி ஆணையாளர்
யாழ்ப்பாணம். யாழ்ப்பாணம்.
90. 08. 10

(B. 1320)

## சிந்தனைக்கு

அநீதிக்கு விரைந்து செயலாற்றும்
தொண்டன் சூதுதான்

— எட்மண்ட் பர்க்

ஈழநாதம்

31, வைமன் வீதி, யாழ்ப்பாணம். 11-08-90
தொலைபேசி
ஆசிரியபீடம்: 025-2839 நிர்வாகபீடம்: 2208
த. பெ. எண் 05

# ஒரு கல்லில் இரண்டு மாங்காய்

சிறிலங்கா அரசபடைகளுக்கும் விடுதலைப்புலிப் போராளிகளுக்கும் போர் தொடங்கி இன்றுடன் இரண்டு மாதங்கள் முடிவடைகின்றன.

இந்த இரண்டு மாதகாலத்திலும் சிறிலங்கா அரசுக்கு ஏற்பட்ட இழப்பு மிகமோசமானது. இதை நிதி அமைச்சரும் பிரதம அமைச்சருமான டி. பி. விஜயதுங்காவே சிறிலங்கா பாராளுமன்றத்தில்வெளிப்படையாகத்தெரிவித்திருக்கிறார்

ஆனாலும் ''கடைசிப் புலியையும் அழிக்கும்வரை போர் தொடரும்'' என்று சிறிலங்காவின் பாதுகாப்பு ராஜாங்க அமைச்சர் ரஞ்சன்விஜேரத்தினா அழிவுப் பேச்சுப் பேசிக்கொண்டிருக்கிறார்.

நடைபெற்றுவரும் போர் தமிழ் மக்களுக்கும் சிங்கள மக்களுக்கும் நடந்துவரும் போர் அல்லவென்றும் இது தமிழ் மக்களுக்கு எதிரான யுத்தம் அல்லவென்றும் சிறிலங்கா ஜனாதிபதி ரணசிங்க பிரேமதாசா கூறி வருகிறார்.

அமைதிப்படை என்ற பெயரில் இந்திய இராணுவத்தை 1987ஆம் ஆண்டில் இங்குவரவழைத்து விடுதலைப் புலிகளுடன் மோதவிட்ட சிறிலங்காவின் முன்னைய ஜனாதிபதி ஜே. ஆர். ஜெயவர்த்தனா ''நான் இப்போது கைகட்டிப் பார்த்துக்கொண்டு நிம்மதியாக இருக்கிறேன். எமது படையினரும் நிம்மதியாக இருக்கின்றனர்'' என்று ஒரு கட்டத்தில் கூறியிருந்தார்.

இதுபோல்தான் இப்பொழுது சிறிலங்கா ஜனாதிபதி பிரேமதாசாவும் இது சிங்களவருக்கும் தமிழருக்கும் நடைபெறும் யுத்தமல்ல என்று கூறுகிறார்.

இடையிடையே கிழக்கு மாகாணத்தில் முஸ்லிம்களும் தமிழர்களும்குடும்பச்சண்டைபோல் மோதிக் கொண்டாலும் சகோதரர்களாக வாழ்ந்த அவர்களுக்கிடையில் மோதலை ஏற்படுத்தி இரண்டு சிறுபான்மைச் சமூகத்தினரும் சண்டையிட்டு அழிந்து போகட்டும் என்ற தந்திரத்தைக் கையாண்டு வரும் சிறிலங்கா ஜனாதிபதி இது தமிழர் சிங்களவர் சண்டையல்ல என்று அர்த்தபுஷ்டியுடன் கூறுகிறார்.

முஸ்லிம் மக்களைப் புதிதாக இராணுவத்தில் அரசு சேர்த்துக் கொள்வதும்ஊர்காவற்படைகளில்முஸ்லிம்களை வலுக்கட்டாயமாகச் சேர்த்துக்கொள்வதும்முஸ்லிம்களைக் கொண்டே தமிழரை அழித்துவிடலாம் என்ற புதிய தந்திரம். இதற்கு சில முஸ்லிம் தலைவர்களும் துணைபோகின்றனர். இதன் விளைவை முஸ்லிம் மக்கள் விரைவில் உணர்ந்துகொள்ளவேண்டியேற்படலாம்.

முஸ்லிம்களைக் கொண்டு தமிழரை அழிக்கலாம் என்பதுடன் சிறுபான்மையினரான முஸ்லிம்களும் அழிவர். பொருளாதாரத்தில் சமீப காலமாக வளர்ந்து வந்த முஸ்லிம் சமூகத்தின் பொருளாதாரத்தையும் அழித்துவிடலாம் என்பதும் சிறிலங்கா சிங்கள அரசின் திட்டம் என்பதை முஸ்லிம் மக்கள் விரைவில் உணர்ந்துகொள்வர்.

முஸ்லிம்களைக் கொண்டே நாட்டில் மற்றொரு இனக்கலவரத்தைத் தூண்டிவிடுவதற்கும் அரசு திட்டமிட்டுச் செயல்படுகிறது. இதன்மூலம் பெரும்பான்மைச் சமூகம் ''நல்லபிள்ளைப் பெயர் பெறலாம்'' என்பதும் அரசின் திட்டமாகும்.

வடக்கிலும் கிழக்கிலும் சிறிலங்கா ஆயுதப் படைகள் தொடர்ந்து தமிழ் இனத்தைப் படுகொலை செய்து அழித்துவரும் அதேசமயம் முஸ்லிம் மக்களையும் தமிழ் மக்களுக்கு எதிராக ஏவிவிட்டு ''ஒரு கல்லில் இரண்டு மாங்காய்'' என்று இலாபம் தேடப்பார்க்கிறது.

இனப் படுகொலையுடன் தொடர்ந்து இரவுபகலாக நடந்துவரும் விமானப் படைகளின் தாக்குதலால் தமிழ் மக்களின் சொத்துக்கள் முற்றாக அழித்துத் தரை மட்டமாக்கப்படுகின்றன.

வெளிநாடுகள் மனிதநேயத்துடன் வழங்கிவரும் நிவாரண உதவிகள் தமிழ் மக்களுக்குக் கிடைக்காமல் செய்யப்பட்டுவிடுகின்றன.

வெளிநாடுகள் அளிக்கும் மருந்துகள் தமிழ் மக்களுக்குப் பயன்படாத வகையில் மருத்துவமனைகள் குண்டு வீசிச் சேதப்படுத்தப்பட்டு விடுகின்றன.

விமானப் படைகளின் தாக்குதலால் காயமடைந்தோர் உயிர்பிழைக்காமல் மருத்துவமனைகள் நாசமாக்கப் படுவதுடன் தமிழ் மக்களின் பொருளாதாரத்தைச் சீர்குலைப்பதற்கும் மின்சார விநியோகம் சீர்குலைக்கப் படுகிறது.

உணவு, மருந்து, எரிபொருள் வடக்கு கிழக்குப் பகுதிகளுக்கு அனுப்பப்படுவதாக வெளி உலகுக்குப் பிரசாரம் செய்யப்படுகிறதேயொழிய அவை தமிழ் மக்களுக்குக் கிடைப்பதில்லை.

இத்தனை அக்கிரமங்களும் அட்டூழியங்களும் தமிழ் மக்களுக்கு எதிராக இழைக்கப்படுகின்றபோதிலும் தமிழ் நாடும் இந்தியாவும் இன்னும் கவலையும் ஆழ்ந்த கவலையும் தெரிவித்துக் கொண்டுதானிருக்கின்றன.

வியட்நாமிய பௌத்தர்களுக்கு இன்னல்வந்தபோது சிறிமா அம்மையார் ஐ. நா. சென்று வாதாடினார். குவைத்தில் மற்றொரு இஸ்லாமிய நாடான ஈராக் நுழைந்து ஆக்கிரமித்ததும் இஸ்லாமிய நாடுகளும் மற்றும் பல நாடுகளும் துடித்துப் பதைத்துக் குரல் கொடுத்து செயல்படுகின்றன.

ஆனால் இலங்கையில் தமிழ் மக்கள் அழித்து ஒழிக்கப்படுகிறார்கள். அவர்களுக்காகக் குரல் கொடுக்க யாரையும் காணோம்.

தமிழனுக்கென்று ஒரு நாடு இல்லாததே இதற்குக் காரணம். உலகில் வாழும் தமிழனுக்காகத் தமிழீழம் பெற்றேயாக வேண்டும். இல்லையேல் தமிழன் என்றோர் இனம் இருந்தது என்றுதான் வரலாறு சொல்லும்.

# எரிபொருள் சக்தி மாற்றீடு; உயிர்வாயு மூலம் சக்தி பெறல்

தற்போதைய சூழ்நிலையில் தமிழீழமானது ஏனைய பகுதிகளில் இருந்து துண்டிக்கப்பட்ட நிலையிலேயே இருக்கின்றது. இது காரணமாகவே எமக்கு தேவையான அத்தியாவசியப் பொருட்களாகிய உணவு மருந்து, எரிபொருள் போன்றவற்றிற்கு பெருந்தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளது.

முக்கியமாக விவசாய நடவடிக்கைகளுக்குத்தேவையான எரிபொருள், கிருமிநாசினிகள், உர வகைகளின் தட்டுப்பாடுகாரணமாக சகல விவசாய நடவடிக்கைகளுமே பாதிக்கப்பட்டுள்ளன.

இவ்வாறான ஒரு நிலையில் நாம் எமது செயற்பாடுகளை எமது சூழ்நிலைகளுக்கும். எமது இயல்பான வளங்களுக்கும் ஏற்றதாக மாற்றிக் கொள்ள வேண்டியது அவசியமானதாகும்.

அவ்வாறான முயற்சிகளின் மூலமே எம்மை அடி பணிய வைக்க நினைக்கும் சிங்கள அரசின் செயற்பாடுகளை வெற்றிகரமாக முறியடித்துக் கொண்டு எமது பணிகளைத் தொடர முடியும்.

இத்தகைய செயற்பாடுகளை அடிப்படையாகக் கொண்டே தமிழீழ ஆய்வு நிறுவமானது எமது வளங்கள், எமது தொழில் நுட்ப வசதிகள் போன்றவற்றைக் கொண்டு பல்வேறு மாற்று நடவடிக்கைகளை தொடர்ச்சியாக அறிமுகப்படுத்திக் கொண்டு வருகின்றது.

அந்த வகையில் இலகுவில் கிடைக்கக்கூடிய வளங்களைக் கொண்டு மாற்று எரிபொருட் சக்தியினை தமிழீழஆய்வு நிறுவனம் அறிமுகப்படுத்துகின்றது.

பொதுவாக உலகில் விசேடமாக தென்கிழக்கு ஆசியாவிலும் உயிர்வாயு (சாணவாயு) தொடர்ச்சியாகவும், சிறப்பாகவும் சக்தியைக் கொடுக்கும் கருவியாக திகழ்கின்றது.

உயிர்வாயு மூலம் சக்தியைப் பெறும் இந்த செயற்பாட்டினையே தற்போது எமது மக்களுக்கு எரிபொருள் மூலம் கிடைக்கும் சக்திக்கு மாற்றீடாக தமிழீழ ஆய்வு நிறுவனம் அறிமுகப் படுத்துகின்றது.

உணவு சமைப்பதற்கு தேவையான சக்தி, வெளிச்சத்துக்கு தேவையான சக்தி, சிறிய ஜெனரேட்டர் மூலம் பெறப்படும் மின்சாரத்திற்கு இணையான சக்தி, விவசாயத்திற்கு தேவையான ளவு நீர் இறைக்கும் இயந்திரத்தினை இயக்குவதற்கான சக்திஎன பல்வேறு வகையான தேவைகளை இந்த சாணவாயு மூலம் பெற்றுக் கொள்ள முடியும்.

சக்தியின் தேவைப்பாடுகளின் அளவினைப் பொறுத்தும் உயிர் வாயுவினை உற்பத்தி செய்யும் அறையின் பரப்பளவும் தொழில் நுட்ப செயற்பாடுகளின் அளவும் வேறுபடும்.

எனவே உயிர் வாயு மூலம் சக்தியைப் பெற்றுக் கொள்ள ஆர்வமுள்ளவர்களும், ஏனையோரும் மேலதிக விபரங்களுக்கும், தொழில் நுட்ப ஆலோசனைகளுக்கும் தமிழீழ ஆய்வு நிறுவனத்துடன் தொடர்பு கொள்ளுமாறு கேட்டுக் கொள்கிறோம்.

அவ்வாறு தொடர்பு கொள்பவர்களுக்கு தேவையான தொழில் நுட்ப ஆலோசனைகளுடன் குறைந்த செலவில் கட்டிட நிர்மாண அமைப்பினையும், பராமரிப்பினையும் தமிழீழ ஆய்வு நிறுவனம் செய்து கொடுக்கும்.

சாணவாயு மூலம் மாற்று எரிபொருள் சக்தியை உற்பத்தி செய்து தங்கள் நலத்தினையும் எமது மண் வளத்தினையும் பெருக்குவதற்கு உற்சாகத்துடன் முன்வருமாறு தமிழீழ ஆய்வு நிறுவனம் அனைவரையும் கேட்டுக் கொள்கின்றது.

**தமிழீழ ஆய்வு நிறுவனம்**

# ஈராக்குடன் குவைத் இணைப்பை ஐ.நா. ஏகமனதாக நிராகரிப்பு

(வாஷிங்டன்)

ஆக்கிரமிப்பு செய்யப்பட்டுள்ள குவைத் நாட்டை தன்னுடன் பூரணமயாக இணைத்துக் கொண்டுள்ள ஈராக்கின் நடவடிக்கையை ஐ. நா. பந்தோபஸ்து சபை ஏகமனதாக நிராகரித்துள்ளதுடன், பலத்த கண்டனத்தையும் தெரிவித்துள்ளது.

ஈராக் தனது இந்த ஆக்கிரமிப்பு நடவடிக்கையை முற்றாக கைவிட வேண்டுமென்று ஐ. நா. கூறியுள்ளதுடன் இந்தக் கைப்பாவை அரசாங்கத்தை அங்கீகரிக்க வேண்டாமென்று அனைத்து நாடுகளுக்கும், ஸ்தாபனங்களுக்கும் வேண்டுகோள் ஒன்றையும் பந்தோபஸ்து சபை விடுத்துள்ளது.

இதேவேளை வளைகுடா சென்றுள்ள அமெரிக்கப்படைகள் சவூதி அரேபியாவின் எல்லைப்புறங்களில் பாதுகாவல் அரண்களை அமைத்து யுத்தமொன்றுக்கான சகல நடவடிக்கைகளையும் மேற்கொண்டுள்ளது.

பிரிட்டன் தனது யுத்தக் கப்பல்களை வளைகுடா பகுதிக்கு அனுப்பி வைத்துள்ளதுடன் வளைகுடா பகுதியில் வைக்கப்பட்டுள்ள கண்ணி வெடிகளை அகற்றும் நடவடிக்கைகளை மேற்கொள்ள உள்ளதாகவும் தெரிவித்துள்ளது.

சோவியத் யுத்தக் கப்பலொன்று சுயஸ் கால்வாய் பகுதியை நோக்கி நகர்த்தப்பட்டுள்ளதாகவும் கூறப்பட்டது.

இதற்கிடையில் தம்மீது எந்தவொரு நாடாவது இராணுவ நடவடிக்கை மேற்கொள்ளுமாகில் இரசாயனக் குண்டுகளைக் கூட பாவிக்கத் தயங்க மாட்டாதென ஈராக் மேற்குலக நாடுகளுக்கு எச்சரிக்கை விடுத்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

# அமெரிக்க - பாகிஸ்தான் உறவு பாதிக்கும்

(இஸ்லாமாபாத்)

புதிய காபந்து அரசாங்கம் திட்டமிட்டபடி அக்டோபர் மாதத்தில் தேர்தல் நடத்தப்படவில்லையாயின் அமெரிக்க பாகிஸ்தான் உறவுகளில் பாதிப்பு ஏற்படலாம் என்று பாகிஸ்தானுக்கான அமெரிக்கத் தூதுவர் திரு. ரொபட் எச்சரிக்கை செய்துள்ளார்.

திருமதி பெனாசிர் பூட்டோவை பிரதமர் பதவியிலிருந்து வெளியேற்றிய நிகழ்ச்சியானது பாகிஸ்தானில் ஜனநாயகத்துக்கு ஏற்பட்டுள்ள படு தோல்வியே என்றும் அவர் கூறியுள்ளார்.

இதேவேளை தமது பதவி நீக்கத்திற்கு இராணுவ உளவு இலாகாவே காரணமென்று திருமதி பெனாசிர் பூட்டோ பத்திரிகை ஒன்றுக்கு அளித்துள்ள பேட்டியொன்றில் கூறியுள்ளதாக தெரிவிக்கப்பட்டது.

## கால்நடை உணவு தட்டுப்பாடு

(ஈச்சமோட்டை)

யாழ்ப்பாணத்தில் கோழி, மாடு வளர்க்கும் பண்ணையாளர்கள் இவற்றை பராமரிப்பதற்கு மிகவும் அவதிப்பட்டு திரிகின்றனர்

கோழித்தீன், தவிடு. பிண்ணாக்கு போன்றவற்கு யாழ். நகரத்தில் மிகவும் தட்டுப்பாடு நிலவுகின்றது. 1 மூடை தவிடு 450 ரூபாவாக விற்பனை செய்யப்படுவது குறிப்பிடத்தக்கது. (43)

# மானிப்பாய் மருத்துவமனை இன்று மீண்டும் செயல்படும் போது கடைப்பிடிக்க சில விதிகள்

(யாழ்ப்பாணம்)

மானிப்பாயில் இயங்கும் யாழ். போதனா வைத்திய சாலையில், பார்வையாளர்களையும், நோயாளர்களுக்கு உதவியாளர்களாக வருபவர்களையும் கட்டுப்படுத்துவதற்காகபின்வரும்ஒழுங்கு விதிகள் இன்று சனிக்கிழமை முதல் நடைமுறைப்படுத்தப்படவுள்ளதாகவும் அதனை சகல மக்களும் கடைப்பிடிக்க வேண்டுமென்றும் வைத்தியசாலைப் பணிப்பாளர் வைத்திய கலாநிதி செல்வி பி.சண்முகம் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

★ வைத்தியசாலை வார்டில் அனுமதிக்கப்படும் நோயாளியுடன் இருவர் மட்டுமே செல்ல அனுமதிக்கப்படுவர்.

★ நோயாளரை ஏற்றிவந்த வாகனம் அந்த நோயாளரை இறக்கியவுடன் வைத்திய சாலையைவிட்டு வெளியேறி விடவேண்டும். எக்காரணம் கொண்டும வாகனம் நிறுத்தி வைக்கப்படலாகாது.

★ சிகிச்சைநிலையங்களுக்குள் (கிளினிக்) நோயாளருடன் எவரும் உள் செல்ல அனுமதிக்கப்படமாட்டார்கள். நடமாடமுடியாத ஒரு நோயாளியாயின், அவருடன் ஒருவர் மாத்திரம் நிற்க அனுமதிக்கப்படுவர்.

★ ஒரு நோயாளியைப் பார்வையிடுவதற்கு, பார்வையிடும் நேரங்களில் இருவர் மாத்திரம் செல்ல அனுமதிக்கப்படுவர்.

★ காலை 7-7.30மணிவரையும் நண்பகல் 11.30 – 12.30 மணிவரையும், மாலை 4 - 5 மணிவரையும் பார்வையாளர் நோயாளரைப் பார்வையிட வேண்டும் என்றும் வைத்திய சாலைப் பணிப்பாளர் தெரிவித்துள்ளார். (மா)

## அ. தி. மு. க. உடைகிறது

(சென்னை)

அ. தி. மு. க, ஜெயலலிதா பிரிவில் இருந்து மற்றும் ஒரு சட்டப் பேரவை உறுப்பினர் திரு. மாதப்பன் திருநாவுக்கரசு தலைமையிலான அ. தி. மு.க. அணிக்கு நேற்று சேர்ந்துள்ளார்.

இவரையும் சேர்த்து திருநாவுக்கரசு அ தி.மு. க. அணியில் ஆறு பேர் அங்கம் வகிக்கின்றனர்.

மேலும் நான்கு உறுப்பினர்கள் திருநாவுக்கரசு அணிக்கு சேர்ந்தால் இந்த அணி தனிக் குழுவாக சட்டசபையில் பணிபுரியும்.

செல்வி ஜெயலலிதா அணியில் தற்போது இருபத்தி மூன்று பேர் உள்ளனர்.

## ஆகாஷ் பரிசோதனை

(புதுடில்லி)

தரையிலிருந்து வானில் பறந்து தாக்கும் அதி நவீன ஏவுகணையான ஆகாஷ் இம் மாத இறுதியில் பரிசோதனை செய்யபபடவுள்ளது என இந்திய பாதுகாப்பு அமைச்சு அதிகாரி கூறினார்.

### 50 நாள் போரில்

(1ஆம் பக்கத் தொடர்ச்சி)

போராளிகளினால் நிர்மூலமாக்கப்பட்டதாகவும், இந்த முகாம்களிலிருந்து பெருந்தொகையான ஆயுதங்கள் கைப்பற்றப்பட்டதாகவும், 'விடுதலைப் புலிகள்' ஏடு தெரிவிக்கிறது.

போராளிகளின் உக்கிரமான தாக்குதலைத் தொடர்ந்து, கிளிநொச்சி உட்பட மட்டக்களப்பு மாவட்டத்தில் கல்குடா, களுவாஞ்சிக்குடி, திருக்கோணமலை மாவட்டத்தில் கிண்ணியா, திரியாய், பன்மதவாச்சி (ஆச்சிரமக் கட்டிடம்), கல்லிறவு, தோப்பூர் இராணுவ முகாம்களிலிருந்து சிங்களப் படையினர் பின்வாங்கிச் சென்று விட்டனர் என்றும் இப் பத்திரிகையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

மேலும் கடற் புலிகளின் கரும் புலித் தாக்குதல், கொண்டச்சி முகாம், கொக்காவில் முகாம், கட்டைபறிச்சான் முகாம், மாங்குளம் முகாம், அம்பாறை மினி முகாம் தாக்குதல் விபரங்களும் இவ் வேட்டில் வெளியிடப்பட்டுள்ளன. (மா)

## ஆசிரியர்களுக்கு சம்பளம் வழங்க 350 லட். கோரிக்கை

(யாழ்ப்பாணம்)

ஆசிரியர்களுக்கான ஆகஸ்ட் மாதச் சம்பளம் வழங்குவதற்கு 350 லட்சம் ரூபாய் கல்வி அமைச்சிடம் கேட்டிருப்பதாக வடமாகாண கல்விப் பணிப்பாளர் இ. சுந்தரலிங்கம் தெரிவித்தார்.

இடம் பெயர்ந்த வடக்கு கிழக்கு தவிர்ந்த ஆசிரியர்களுக்கு''டி'' படிவம் நிரப்பாமல் விட்டவர்களுக்கும் சேர்ந்தவர்களுக்கும் ஆயிரம் ரூபா வழங்கத் தீர்மானித்துள்ளதாகவும் அவர் தெரிவித்தார்.

மேலும் வடக்குக் கிழக்கு மாகாணங்களில் இருந்து இடம் பெயர்ந்து வந்துள்ள ஆசிரியர்களுக்கான சம்பள முற்பணம் எதிர் 15-ம் திகதி யாழ் கல்வித் திணைக்களத்தில் 9 00 மணிக்கு வழங்கப்படும் என தெரிவித்தார்.


ஆனால் இச் சம்பளமானது (1-8-90) க்கு முன்பாக தத்தம் மாவட்டங்களில் பதவிநிலை உத்தியோகத்தர்களினால்சிபார்சு செய்யப்பட்டு கொடுக்கப்பட்ட விண்ணப்பங்களுக்கு மட்டும் வழங்கப்படும் என்றும் விண்ணப்பதாரியே நேரில் வந்து இடு சம்பளத்தை பெறுமாறுச் அடையாள அட்டை இரண்ம் ரூபா முத்திரை ஆகியவற்றுடன் வரும்படியும் இ. சுந்தரலிங்கம் கேட்டுக்கொள்கிறார். சாட்டுதல் ஏற்றுக்கொள்ளப் படமாட்டாதாம். (லோ(

## கூரைத் தகடுகள் உதவி

(யாழ்ப்பாணம்)

வலி. வடக்கு உதவி அரசாங்க அதிபர் பிரிவில் தங்குமிட வசதியின்றித் தவிக்கும் அகதிகளுக்குஐக்கியநாடுகளின் அகதிகளுக்கான உயர்ஸ்தானிகராலயம் (யு.என்.எச்.சி.ஆர்) தற்காலிகமாக முகாம்அமைக்கச் சுமார் 45 ஆயிரம் ரூபா பெறுமதியான கூரைத் தகடுகளை வழங்கவுள்ளது.

இன்று சனிக்கிழமை யாதழ்பாணத்திலுள்ள இந்த ஸ்ப்ரா பனம் யாழ். அரசாங்க அதிபரிடம் 100 கூரைத் தகடுகளையும் வழங்கவுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது. (மா)



விமானத்தாக்குதலுக்குள்ளான ஊர்காவற்றுறை சூசையப்பர் ஆலயம்

## போக்குவரத்து பதிவுகள் இன்று இடம் பெறாது

பயணிகள் போக்குவரத்து தொடர்பாக இன்று 11 ஆம் திகதி எந்தவிதமான பதிவுகளும் இடம் பெற மாட்டாது இதுவரை பதிந்து அனுமதிப் பத்திரம் கிடைக்காதவர்களுக்குரிய மீழ்பரிசீலனை மட்டும் இன்று நடைபெறும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

இப்பரிசீலனையில் கிடைக்காத அனைவரது பாஸ்களும் ரத்து செய்யப்பட்டு அவர்கள் புதிய பாஸ்களுக்கு விண்ணப்பிக்கவேண்டும்.

## அகதிகள் நிவாரணத்துக்காக இந்துக்கல்லூரி உதவி

(கொழும்புத்துறை)

ஸ்ரீலங்கா இராணுவத்தினரின் கெடுபிடியால் வெளிமாவட்டங்களிலிருந்தும், யாழ். மாவட்டங்களிலிருந்தும், இடம்பெயர்ந்த மக்களின் உடனடி நிவாரணத்திற்கென யாழ். இந்துக்கல்லூரி சமூகசேவைப் பிரிவு பதினெண்ணாயிரத்து நூற்றிமுப்பது ரூபாவை சேகரித்து தமிழர் புனர் வாழ்வுக் கழகத்திடம் ஒப்படைத்துள்ளது.

இத்துடன் தாம் சேகரித்த ஐந்து மூடை உடைகளையும் இடம்பெயர்ந்த மக்களுக்குப் பங்கிட்டு வழங்குவதற்காக தமிழர் புனர்வாழ்வுக் கழகத்திடம் ஒப்படைத்துள்ளனர்.

### அகதிகள்

(1ஆம் பக்கத் தொடர்ச்சி)

ப்பதால் தமிழக அரசுக்குப் பெரும் சிரமங்கள் ஏற்பட்டுள்ளதாகவும் அவர் மேலும் கூறினார்.

### மாந்தையை

(1ஆம் பக்கத் தொடர்ச்சி)

வீடுகளும், ஆறு கடைகளும் தீயிட்டுக் கொழுத்தப்பட்டன அத்தோடு ஒரு மினிவானும் மோட்டோர் சைக்கிளும் பல துவிச்சக்கர வண்டிகளும் கொழுத்தப்பட்டன.

மேலும் திருக்கேதீஸ்வரப் பகுதியில் வைக்கப்பட்டிருந்த பல ஆயிரம் மூடை நெல்லை இராணுவத்தினர் சூறையாடி சென்றதாகவும் அங்கிருந்து வரும் செய்திகள் தெரிவிக்கின்றன.

### வேலணையில்

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

தண்ணீர் பெறச் சென்ற சேனாதிராசா தவச்செல்வம் (வயது 37) என்பவர் தலையில் காயம் ஏற்பட்டு இரத்தப் பெருக்கினால் அந்த இடத்திலேயே மரணமானார்.

தொடர்ந்தும் இந்த ஹெலிகொப்டர் தாக்குதல்களை நடாத்திய போது பலர் காயமடைந்துள்ளனர். வேலணை, புங்குடுதீவு, ஊர்காற்றுறை பகுதிகளிலும் விமானத்தாக்குதல்கள் இடம்பெற்றன. புங்குடுதீவுப் பகுதியில் மினிபஸ் ஒன்றிற்கு சுட்டதில் பலர் காயமடைந்துள்ளனர்.

### கடத்தப்பட்ட

(1ஆம் பக்கத் தொடர்ச்சி)

பின்புறம் இளைஞர் ஒருவரின் சடலம் காணப்பட்டது.

பாதுக்கையில் உள்ள ஆலயம் ஒன்றிலிருந்து 40 ஆயிரம் ரூபா பெறுமதியான புனித சின்னம் கொள்ளையடிக்கப் பட்டது.

கெக்கிராவையில் குகை ஒன்றைப் பொலிஸார் சுற்றி வளைத்துத் தேடுதல் நடத்திய போது தப்பியோடிய ஒருவர் பொலிஸாரால் சுடப்பட்டார்.

ஒரு எல். எம். ஜி. உட்பட 16 துப்பாக்கிகள், தோட்டாக்கள், தட்டச்சு இயந்திரம், ரோணியோ யந்திரம் என்பனவும் மீட்கப்பட்ன.

### யாழ் தபாலகத்தில்

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

பெருமளவிலான மக்கள் இவ் வெளிநாட்டுக்கடிதங்களையே நம்பியுள்ளனர். இதை நீங்கள் தாமதப்படுத்தலாமா என எமது நிருபர் கேட்டதற்கு இவ்விடயம் தொடர்பாக திங்கட் கிழமையே எவ்வித நடவடிக்கை எடுக்கப்படும் எனத் தீர்மானிக்கப்படும் எனவும் தெரிவித்தார்.

அதேவேளை யாழ். நகரில் தலைமைத் தபால் பணிமனை அமைந்துள்ள பகுதியிலேயே கடந்த சில நாட்களாகக் கடும் விமானக் குண்டு வீச்சு இடம் பெறுவதும் குறிப்பிடத்தக்கது.

## தமிழ் இளைஞர் கொழுபபில் கைது

(கொழும்பு)

கொழும்பில் கடந்த சில தினங்களில் பல தமிழ் இளைஞர்களை ஸ்ரீலங்கா படையினர் கைது செய்துள்ளதாக ஏஜென்ஸி செய்திகள் தெரிவித்தன.

### இரண்டுமாத

(1ஆம் பக்கத் தொடர்ச்சி)

ஐந்தரை மணியளவில் யாழ். கோட்டை மற்றும் நகரப் பகுதிக்கு மேல் வட்டமிட்ட போர் விமானங்கள் ஐந்து சிறிது நேரத்தில் பலத்த சத்தத்துடன் குண்டுமாரி பொழிந்தன. இதன் பின் ஹெலியொன்றும் வட்டமிட்டது. மக்கள் பதுங்குகுழிகளில் தஞ்சம் புகுந்தனர். மற்றும் பலர் ஆலயங்கள், தேவாலயங்களில் போய்த் தங்கினர்.

### வீரவணக்க

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

டித்துறை), இளம்புலி ஞானம் (ஐயாத்துரை கோபாலகிருஷ்ணன் நீர்வேலி, ஆகியோர் வீரமரணமடைந்தனர்.

மேஜர் ஜேம்ஸ் முன்னாள் வடமராட்சி, தீவுப்பகுதிப் பொறுப்பாளராவார். இவ் இருவருக்கும் விடுதலைப்புலிகள் தமது வீரவணக்கத்தைத் தெரிவித்துள்ளனர்.

## அவசர அரபு உச்சி மாநாடு ஒத்திவைப்பு

(கெய்ரோ)

எகிப்தின் தலைநகரான கெய்ரோவில் நடைபெறவிருந்த அவசர அரபு உச்சி மாநாடு ஒத்திவைக்கப்பட்டுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது

அரபு நாடுகளின் தலைவர்கள் உரிய நேரத்தில் கெய்ரோ சென்றடையாததைத் தொடர்ந்தே இந்த உச்சி மாநாடு ஒத்திவைக்கப்பட்டுள்ளது.

குவைத் மீதான ஈராக்கின் ஆக்கிரமிப்புக் குறித்து விவாதிக்கும் வகையிலேயே இந்த அவசர உச்சி மாநாடு ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது குறிப்பிடத்தக்கது.

இதேவேளை இம்மாநாட்டில் கலந்துகொள்ளும் வண்ணம் ஈராக்கிய இரண்டு உயரதிகாரிகள் கெய்ரோ சென்றடைந்துள்ளனர்.

இந்த மாநாட்டி குவைத்தின் முன்னாள் அதிபர் அமீரும் கலந்துகொள்வார் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

### புலிகளை

(1ஆம் பக்கத் தொடர்ச்சி)

மைகளை அறியமுடியாது உள்ளது என ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி எம். பியான ரி. டபிள்யூ. ராஜரட்ணம் கூறினார்.

### இன்று

(1 ஆம் பக்கத் தொடர்ச்கி)

இக்குழு வடக்கு கிழக்கு நிலமைகள் குறித்து மாலைதீவு தலைவர்களுக்கு விளக்கமளிக்கும்.

## மறுமலர்ச்சிக் கழக விசேட கூட்டம்

மறுமலர்ச்சிக்கழக சகல அங்கத்தவர்களுக்குமான விசேட பொதுக்கூட்டம் 14ஆம்திகதி செவ்வாய்க்கிழமை காலை 9மணிக்கு கைலாசபதி கலை அரங்கத்தில் நடைபெற உள்ளது. சகல அங்கத்தவர்களையும் தவறாது சமுகம் தருமாறு அறிவிக்கப்பட்டுள்ளது.

இப்பத்திரிகை யாழ்ப்பாணம் வைமன் வீதி 31- ஆம் இலக்கத்திலுள்ள '' ஈழநாதம் '' பணிமனையில் 1990 ஆம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் 11 ஆம் தேதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.